# பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள்
## முன்னிலை :- திரு. கி.அர்ச்சுணன்

ந.க.எண். 185 / 2018 நாள். 04.12.2020.

பொருள் :- குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் – ராணிப்பேட்டை மாவட்டம் – பனப்பாக்கம் பேரூராட்சி – சர்வே எண். 418/6பி (ம) 418/7பி– ல் 1.20 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க – தொழில் நுட்ப அங்கீகாரம் வரப்பெற்றது – குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவு பிறப்பித்தல் சார்பு.

பார்வை :-

(1) திருமதி. N.பரிமளம், 6பி/43, ஸ்ரீரங்கராஜ வீதி, இராஜேந்திரா அவென்யூ, சின்ன காஞ்சிபுரம் என்பவரின் 28–08–2018ம் தேதிய விண்ணப்பம்.
(2) இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.185/2018/அ3 நாள்.03.09.2018
(3) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்கள், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அலுவலகம், எண்.239, ஃபேஸ்–2, சத்துவாச்சாரி, வேலூர்–9 அவர்களின் கடிதம் ந.க.எண்.4982/2018/வேம3 நாள். 16.10.2018.
(4) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்கள், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அலுவலகம், எண்.239, ஃபேஸ்–2, சத்துவாச்சாரி, வேலூர்–9 அவர்களின் கடிதம் ந.க.எண்.4982/2018/வேம3 நாள். 19.06.2019
(5) திறந்தவெளி ஒதுக்கீடு சாலை, பூங்கா இடங்களுக்கான தானப் பத்திர பதிவு எண். 3231/2019 நாள். 24.07.2019
(6) இவ்வலுவக கடிதம் ந.க.எண். 404 / 2019 நாள். 05.08.2020
(7) பனப்பாக்கம் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண். 313 நாள்.21.08.2019.
(8) உதவி பொறியாளர், பனப்பாக்கம் அவர்களின் கடிதம் எண்.245 / உ.மி.பொ/இ&ப/பனப்பாக்கம் / கோ– பஞ்சாயத்து / 2019–20 நாள். 11.11.2019ன் படி தொகை செலுத்திய ப.கே.ரசீது எண்.454 நாள்.11.11.2019.
(9) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம், அவர்களின் கடிதம் ந.க.எண்.4982/2018/வேம3, நாள். 27.02.2020
(10) பனப்பாக்கம் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண். 443 நாள். 23.11.2020
(11) இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 185 / 2018 நாள்.23.11.2020
(12) இவ்வலுவலக பலவகை கேட்பு ரசீது எண். 371 / 2020–2021 நாள்.03.12.2020
(13) தொடர்புடைய ஆவணங்கள்.

..................................

**உத்தரவு**

ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சிப் பகதியை சார்ந்த திருமதி. N.பரிமளம் என்பவர் தனக்கு சொந்தமான சர்வே எண். 418/6பி (ம) 418/7பி– ல் 1.20 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க பார்வை–1ல் காணும் 28.08.2018ம் தேதியில் விண்ணபம் அளித்துள்ளார்.

மேறப்டி மனுதாரரின் விண்ணபத்தினை பார்வை–2ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் வேலூர் நகர் ஊரமைப்பு துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டதன்பேரில் பார்வை (4)ல் காணும் வேலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உத்தேச குடியிருப்பு மனைப்பிவில் பொது திறவெளி ஒதுக்கீடு / சாலை / பூங்கா இடங்களை பேரூராட்சிக்கு தானமாக வழங்கி பத்திர பதிவு செய்து பார்வை–(5)ல் காணும் மனுதாரரால்

ஆவணங்களை ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி குடியிருப்பு மனைப்பிரிவில் சாலை மேம்பாடு, வடிகால் வசதி ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து கொடுத்துள்ளார். தெருவிளக்கு வசதி மேற்கொள்ள மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை பார்வை–(8)ல் கண்டுள்ளவாறு மனுதாரரால் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

அதனைதொடர்ந்து, மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கி பார்வை–(9)ல் காணும் கடிதத்தில் வரைபட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோக பைப்லைன் அமைத்தல் மற்றும் இதர கட்டணத்தினை பார்வை–12ல் கண்டுள்ளவாறு மனுதாரரால் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், பார்வை (10)இல் காணும், இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண். 443 நாள்.23.11.2020ல் மேற்படி மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்படி சர்வே எண். 418/6பி (ம) 418/7பி– ல் 1.20 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளபடி 22 குடியிருப்பு மனைகள் மற்றும் 1 கடைக்கான மனைகள் அமைந்துள்ள மனைப்பிரிவாக அங்கீகரித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மேற்படி மனைப்பிரிவு அங்கீகாரத்தை உயர் அதிகாரிகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் அவர்கள் மூலம் ரத்து செய்ய உத்திரவு பிறப்பித்தால் உடனே மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.
2. இம்மனைப்பிரிவு சம்மந்தமாக பொது மக்களின் நன்மையை கருதி அவ்வப்போது பேரூராட்சியினால் பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்கு மனைப்பிரிவுதாரர் கட்டுப்பட்டவராவார்.
3. தமிழக அரசு ஆணை எண்.130/ நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.06.1999 (அரசு ஆணை எண்.79 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.16.06.2000) அரசுக்கடிதம் எண்.26331/ ந.நி.99–8 நாள் 16.6.2000 ஆகியவற்றில் கண்டுள்ள அனைத்து சட்ட பிரிவுகளுக்கும் 1920ம் ஆண்டின் மாவட்ட நகராட்சிகள் சட்ட விதிகளுக்கும் மற்றும் 1994ம் வருடத்திய நகரமைப்பு சட்டப்பிரிவுகளின் மனைப்பிரிவு விதிமுறைகளுக்கும் மனைப்பிரிவு தாரர் கட்டுப்பட்டவராவார்.
4. வேலூர் மண்டல இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ராணிப்பேட்டை அவர்களின் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.நா.ஊ.உ.(ரா.மாவ) எண். 83 / 2020 என எண்ணிடப்பட்டும், ந.க.எண்.4982/2018/வே.ம.3 நாள். 27.02.2020இல் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் மனைப்ரிவுதாரர் கட்டுப்பட்டவராவார்.

செயல் அலுவலர்
பனப்பாக்கம் பேரூராட்சி
ராணிப்பேட்டை மாவட்டம்.

பெறுநர்
திருமதி. N.பரிமளம்,
6பி/43, ஸ்ரீரங்கராஜ வீதி,
இராஜேந்திரா அவென்யூ,
சின்ன காஞ்சிபுரம்.

நகல்
1. இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 14/ஜி, முதல் மாடி, M.B.T. ரோடு, நவல்பூர், ராணிப்பேட்டை.
2. சார்பதிவாளர், சார்பதிவு அலுவலகம், காவேரிப்பாக்கம் .